# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>உயர் ஸ்தானிகர் மற்றும் பிரதிக் கல்வி அமைச்சர் ஆகியோரால் கொழும்பில் ஆரம்பித்துவைக்கப்பட்ட இரண்டாவது பாரத் இலங்கை இந்தி மாநாடு</u>**

இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தினால் 2026 ஜனவரி 12 ஆம் திகதி பாரத் இலங்கை இந்தி மாநாடு கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த இந்தி மாணவர்கள், புலமையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட 400க்கும் அதிகமானோர் கலந்துகொண்டிருந்தமை, இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான கலாசார மற்றும் மொழியியல் தொடர்புகளை பிரதிபலிக்கின்றது.

இந்த நிகழ்வானது கல்வி மற்றும் உயர் கல்வி பிரதி அமைச்சர் கௌரவ டாக்டர் மதுர செனவிரத்ன அவர்கள் கௌரவ விருந்தினராக கலந்துகொண்டிருந்த நிலையில், இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்களால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இலங்கையில் இந்தி மொழியின் மேம்பாட்டுக்காக பல தசாப்தங்களாக சேவையாற்றிய இலங்கையைச் சேர்ந்த இந்தி புலமையாளர்கள் இங்கு கௌரவிக்கப்பட்டிருந்தமை இந்நிகழ்வின் சிறப்பம்சமாகும்.

இங்கு ஆரம்ப உரை நிகழ்த்தியிருந்த உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அவர்கள், உலகளாவிய ரீதியில் 600 மில்லியனுக்கும் அதிகமானோர் இந்தி மொழியினைப் பேசும் நிலையில் அதிகளவில் பேசப்படும் மூன்றாவது மொழியாக இந்தி மொழிக்கான உலகளாவிய முக்கியத்தும் வளர்ந்து வருவதை சுட்டிக்காட்டியிருந்தார். இலங்கையில் உள்ள இந்திமொழி புலமையாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் மேற்கொண்ட முயற்சிகளுக்கு பாராட்டுகளைத் தெரிவித்திருந்த உயர் ஸ்தானிகர் அவர்கள், இந்த நிகழ்வை ஒழுங்கமைத்திருந்தமைக்காக நன்றியினையும் தெரிவித்திருந்தார். புலமைப் பரிசில்கள் மூலம் இலங்கை மாணவர்களை இந்தியாவுக்கு அனுப்புதல், இந்தி புலமை மேம்பாட்டுக்காக பேராசிரியர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான ஆளுமை விருத்தி திட்டங்கள், இலங்கையில் இந்தி கற்கைகளை வளர்க்கும் வகையிலான கல்வி மற்றும் கலாசார பரிமாற்றங்கள் உட்பட இந்தி மொழி மேம்பாட்டுக்காக சுவாமி விவேகானந்தா கலாசார

நிலையத்தினால் முன்னெடுக்கப்படும் திட்டங்களையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அன்றைய தினம் முழுவதும் நடைபெற்ற கொண்டாட்டங்களில், இலங்கையின் ஐந்து கீர்த்திமிகு பேச்சாளர்கள் பங்கேற்ற ஒரு கல்வி ரீதியான அமர்வு, நாட்டில் இந்தி மொழியின் கலைச் செழுமையை காண்பிக்கும் கவி அரங்கு, நவீன கல்வியில் இந்தி மொழியின் பங்கு குறித்த பேச்சுகளை ஊக்குவிக்கும் ஒரு திறந்த உரையாடல் மற்றும் இந்தியா மற்றும் இலங்கையின் பொதுவான பாரம்பரியத்தை சுட்டிக்காட்டும் கலாசார நிகழ்ச்சிகள் ஆகியவை அடங்குகின்றன.

பழைய இந்தி திரைப்படங்கள் மற்றும் பாடல்களின் இலங்கை ஆர்வலர்கள் சங்கத்தினர் இசைத்த இந்தி திரைப்பட பாடல்களுடன் இந்நிகழ்வு நிறைவடைந்தது. இந்த மாநாட்டில், 19 இந்திய மாநிலங்களைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் மற்றும் அறிஞர்கள் மற்றும் 8 பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்த அதேவேளை, இலங்கையின் 50க்கும் மேற்பட்ட பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்க மற்றொரு சிறப்பம்சமாகும். இதன் ஆரம்ப விழாவில், ‘இலங்கை இந்தி சமாச்சார்’ சஞ்சிகை மற்றும் புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர் ஐயாத்துரை சாந்தன் அவர்களது 21 சிறு கதைகளின் இந்தி மொழிபெயர்ப்புகளைக் கொண்ட நூலும் வெளியிடப்பட்டது.

வருடந்தோறும் ஜனவரி 10 ஆம் திகதி உலக இந்தி தினம் அனுஸ்டிக்கப்படுகிறது, 1949 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் இந்தி முதன்முதலில் பேசப்பட்ட நாளை நினைவுகூரும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுகிறது. 1975 ஆம் ஆண்டு நாக்பூரில் நடைபெற்ற முதல் உலக இந்தி மாநாட்டையும் இத்தினம் நினைவுபடுத்துகிறது. இலங்கை முழுவதும் உள்ள 88 பாடசாலைகள் மற்றும் 10 பல்கலைக்கழகங்களில் இந்தி மொழி கற்பிக்கப்படுகின்றமை இலங்கையில் அதன் வளர்ச்சியை பிரதிபலிக்கிறது.

பாரத்-இலங்கை இந்தி மாநாடு இரு நாடுகளுக்கும் இடையிலான மொழியியல் மற்றும் கலாசார உறவுகளை வலுவாக்கவும், இந்தி மொழியை மேம்படுத்துவதற்கான பகிரப்பட்ட உறுதிப்பாட்டைக் கொண்டாடுவதற்குமான ஒரு தளமாக செயல்பட்டமை குறிப்பிடத்தக்கது.

************

கொழும்பு
12 ஜனவரி 2026